கன்னியாகுமரி மாவட்டப் பொதுத் தேர்வுகள் www.em.tnschools.co.in

காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2013

------

**வகுப்பு 11**

காலம்: 3.00 மணி **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள்: 80

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள்நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

**I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக:** **3×4=12**

1) கல்வியே அழியாச் செல்வம் என்பதனை மறைமலையடிகள் எங்ஙனம் எடுத்துரைக்கிறார்
2) மக்கள் விலங்குகளிலும் உயர்வுடையவர்கள் என்பதனை எவ்வாறு காட்டியுள்ளார்?
3) நலங்கிள்ளியின் படைவீரத்தையும் கொடை வீரத்தையும் எழுதுக.
4) பழந்தமிழரின் படைமாட்சி குறித்து ஆசிரியர் கூறுவன யாவை?
5) பட்டினத்தடிகள் போற்றிய மூவர் யார்? அவர் தம் அருஞ்செயல்கள் யாவை?

**II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக:** **3×4=12**

6) அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறையாக மறைமலையடிகளார் உரைப்பன யாவை?
7) வீரம் என்னும் சுவை குறித்து ஆசிரியர் கூறியுள்ளன யாவை?
8) பண்டைத் தமிழரின் போர் நெறி யாது? அதனைக் கம்பர் தன் காப்பியத்தில் எங்ஙனம் காட்டியுள்ளார்?
9) கங்கை வேடனும் காளத்தி வேடனும் இறைவனுக்கு அளித்த காணிக்கைகளை விளக்குக.
10) வானர வேந்தனாகிய சுக்கிரீவன் அகங்குழைந்து பாராட்டும் இருவர் யாவர்? அவர் தம் செயல்கள் யாவை?

**III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை தருக:** **1×6=6**

11) முதுகுடிப் பிறந்த மகளின் வீரப்பண்பையும் திருக்குறள் காட்டும் தமிழரின் படைமாட்சியையும் போர் நெறிகளையும் விளக்குக.
12) உயரிய அன்பு நெறியைக் கடைபிடித்து அழியாப் புகழ் பெற்றனர் காளத்தி வேடனும், கங்கை வேடனும் என்பதனை விளக்கிக் கட்டுரை ஒன்று எழுதுக.

**IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக:** **2×10=20**

13) 'ஒரு நாள் கழிந்தது' **அல்லது** 'செங்கமலமும் ஒரு சோப்பும்' என்னும் சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக. **(அல்லது)**
'தேங்காய்த்துண்டுகள்' என்னும் கதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.
14) 'மறுமணம்' **அல்லது** 'ஒரு நாள் கழிந்தது' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க. **(அல்லது)**
கைம்பெண் ஒருத்தி மறுமணம் செய்து கொண்டு வாழ்வில் உயர்ந்ததாய் நும் கற்பனைக் கலந்து ஒரு கதை எழுது.

**V. பின்வரும் செய்யுளைப் படித்து, அதில் அமைந்துள்ள மையக்கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக:** **1×10=10**

15)
பாலைவனம் சோலைவனமாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளில் பல தொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலை உடை கதருடையாய்த் திகழ வேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
வெற்றியின் மேல் வெற்றி எமக்கெய்த வேண்டும்.

- *கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை*

www.em.tnschools.co.in



**VI. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக: 3×2=6**

16) Self help is the best help.

17) Where there is a will there is a way.

18) No pain no gain.

19) One flower makes no garland.

20) Glass articles inside: handle the parcel carefully.

21) Indian people always dislike violence.

**VII. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக: 1×4=4**

22) அ) நெருப்பில்லாமல் புகையாது

ஆ) தன் கையே தனக்குதவி

இ) முயற்சி திருவினையாக்கும் **(அல்லது)**

'நீர் வீழ்ச்சி' **அல்லது** 'வெண்ணிலா' என்னும் தலைப்பில் எட்டு வரிகளில் கவிதை எழுதுக.

**VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக: 10×1=10**

23) புலி துரத்தின். மான்கள் ஓடியது.

***(வாக்கியப் பிழையை நீக்குக)***

24) கொல்லை கிணற்றிலே வெண்ணிலா பந்து.

***(தேவையான இடத்தில் வல்லொற்றுகளை இடுக)***

25) சென்னைச் சென்றுத் திரும்ப எவ்வளவுச் செலவாகும்.

***(தேவையற்ற வல்லொற்றுகளை நீக்குக)***

26) ஸ்கூல் விட்டதும் டீச்சர் லைனில் போகச் சொன்னார்கள்.

***(ஆங்கிலச் சொற்களை நீக்கி தமிழில் எழுதுக)***

27) தாங்கள் பந்து மித்திரர்களுடன் வந்திருந்து வது-வரர்களை ஆசீர்வதிக்க வேண்டுகிறோம்.

***(பிறமொழிச் சொற்களை நீக்கி இனிய தமிழில் எழுதுக)***

28) தென்னை இலையால் கீற்றுப் பின்னுவார்கள்.

***(மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக)***

29) அலகு - அழகு. வலி - வழி

***(பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் வாக்கியங்களில் அமைத்து எழுதுக)***

30) தோட்டத்தில் வாழைச்செடியும், மாஞ்செடியும் தென்னங்கன்றும் நட்டாங்க.

***(மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக)***

31) பேருந்து நிறுத்துமிடத்தில் பல்லிக்கூடம் இறுக்கிறது.

***(எழுத்துப் பிழைகளை நீக்கி எழுதுக)***

32) குகன் இராமனுக்குப் பொன்னினும் இனியன் ஆனான் புகழினும் இனியன் ஆனான் மற்றெதனினும் இனியன் ஆனான் என்பது வெளிப்படையாக விளங்குகின்றது

***(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுது)***

--------